அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	தொழில்சார் தகைமைகள்
வார்ப்பு வடிவமைப்பு உதவியாளர்	I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல். அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத வார்ப்பு வடிவமைப்பு பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் வார்ப்பு வடிவமைப்பு தயாரிப்பு தொடர்பாக 02 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
கெமிகல் கிளீனர் (பவுடர் கோர்ட்டின்)	I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல். அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பவுடர் கோர்ட்டின் பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 02 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

III. **அனுபவம்** : குறித்த துறையில் காணப்படும் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

IV. **உடல்சார் தகைமைகள்** : சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. **ஏனையவை** :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
II. விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;
III. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்காக அவசியமாகின்ற தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

10. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

11. **ஆட்சேர்ப்பு முறை**.- தேகாரோக்கியம் தொடர்பான நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் செயன்முறைப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளில் திறமைகளின் ஒழுங்கு வரிசைப்படியும் காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்	ஆகக்கூடிய புள்ளிகள்	புள்ளிகள் வழங்கப்படும் முறை	புள்ளிகள்
மேலதிக கல்வித் தகைமைகள்	15	* க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையின் ஒரு பாடத்திற்கு 3 புள்ளிகள் வீதம் 3 பாடங்களுக்கும் 09 புள்ளிகளும்	09 புள்ளிகள்
		* அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா அல்லது அதற்கு உயர்வான தகைமை களைப் பெற்றிருப்போருக்கு 03 புள்ளிகள்	03 புள்ளிகள்
		* முழுநேர பாடநெறியை 06 மாதங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மணித்தி யாலங்களைப் பூர்த்தி செய்த சான்றிதழ் பாடநெறிக்காக 03 புள்ளிகள்	03 புள்ளிகள்